

மதுராபுரி அம்பிகை மாலை

மெய்யம்மை பதிப்பகம்

உ

நலம் பொலிக

மதுராபுரி அம்பிகை மாலை



மெய்யம்மை பதிப்பகம்

சென்னை - 14.   காரைக்குடி - 1.

1980

மெய்யம்மை பதிப்பக வெளியீடு : 3.
முதற்பதிப்பு : டிசம்பர், 1980.

விலை : ரூ. 11/-

வெளியீடு, விற்பனை உரிமை

மெய்யம்மை பதிப்பகம்

திரு. வி. க. இல்லம்,
49, ஆறு. ஆ. இராம. வீதி,
காரைக்குடி - 623 001

41, மாசிலாமணி முதலியார் தெரு,
பாலாசி நகர்,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

மதராஸ் ரிப்பன் பிரஸ், புதுக்கோட்டை

பதிப்புரை

தொண்ணூற்று ஆறு வகைச் சிற்றிலக்கியங்களில் ''மாலை''யும் ஒன்றாகும். மதுரையிற் கோயில் கொண்டுள்ள மீனாட்சி அம்மையின் மேல் சொன்னயம் பொருணயம் பொருந்திய முப்பது பாடல்களால் தொடுக்கப் பெற்றது "மதுராபுரி அம்பிகை மாலை"யாகும்.

இறைவி வழிபாட்டிற்குரிய பனுவல்களில் ''அபிராமி அந்தாதி''யே தற்போது எங்கும் யாவராலும் பயன்படுத்தப் பட்டு வருகின்றது. ஆனால் காலத்தால் முற்பட்ட ''மதுராபுரி அம்பிகை மாலை" இன்னும் பலருக்கு அறிமுகமாகவில்லை. எனவே, எங்கள் பதிப்பகத்தின் மூன்றாவது வெளியீடாக ''மதுராபுரி அம்பிகை மாலை''யினைப் பதிப்பித்துத் தமிழ் மக்களிடையே பரவும் வகை செய்தல் வேண்டும் எனக் கருதிச் செயற்பட்டோம்.

இந்த நூலின் ஆசிரியர் "குலசேகர பாண்டியன்" என அறிகின்றோம். ''இக்குலசேகரன் பதினாறாம் நூற்றாண்டில் (1551-1564) அரசாண்ட சாலிவாடிப்பெருமாள் குலசேகரராக இருத்தல் கூடும்'' என அறிஞர் திரு. மு. அருணாசலம் பிள்ளை கருதுகின்ருர். ''இப்பாண்டியன் அதிவீரராமன் தந்தை. அதிவீர ராமனும் வரதுங்க ராமபாண்டியனும் பதினாறாம் நூற்ருண்டில் வாழ்ந்து சிவமணம் கமழ்கின்ற சிறந்த நூல்கள் செய்திருக்கிறார்கள். அவர்கள் நூல் செய்யுமளவு புலமையும் பக்திப் பெருக்கும் விளையக் காரணம் அதிவீரர் தந்தையும் வரதுங்கர் சிறிய தந்தையுமாகிய குணசேகரர் என்றே கருதலாம். வரதுங்கராம பாண்டியர் இக்குலசேகரருடைய தமையன் பராக்கிரமனுடைய புதல்வர்''. (மு. அருணாசலம் பிள்ளை).

இந்நூலுக்கு முன்னுரையும் பாடல்களுக்குப் பொழிப்புரையும் எழுதியுதவிய எங்கள் இராமசாமி தமிழ்க் கல்லூரி முதல்வர் புலவர் திரு. தெ. முருகசாமி, எம்.ஏ., பி.ஓ.எல்.

அவர்கட்கும், அச்சுப்பிழை திருத்தியுதவிய பேராசிரியர்கள் திருவாளர்கள் க. தியாகராசன், எம்.ஏ., நா. சுப்பிரமணியன், எம்.ஏ., ஆகியோருக்கும் என் நன்றி உரியது.

வழக்கம் போல் இந்த நூலையும் சிறந்த முறையில் அச்சேற்றித் தந்த புதுக்கோட்டை ரிப்பன் அச்சகத்தாருக்கும், மெய்யம்மை பதிப்பகத்தின் வளர்ச்சியில் முழு ஈடுபாடு கொண்டு அயராது உழைக்கும் திரு. பழ. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கட்கும் என் உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மதுரை மாநகரில் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெறவிருக்கும் இவ்வேளையில் மீனாட்சியம்மையின் பேரில் அமைந்த இந்த நூலினை வெளியிட்டிருக்கும் எங்கள் பதிப்பகத்திற்குத் தமிழ்ப் பெருமக்கள் இந்நூலினை வாங்கு முகத்தான் பேராதரவு நல்குவர் எனப் பெரிதும் நம்புகின்றேன்

வாழிய செந்தமிழ் !

காரைக்குடி
29-12-80

அன்பன்,
பெரியகருப்பன்



முன்னுரை

புலவர் தெ. முருகசாமி எம்.ஏ., பி.ஓ.எல்.,
முதல்வர்,
இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி-க.

மாலை என்பது சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று. மதுரை மீனாட்சி அம்பிகையைப் பற்றியது 'மதுராபுரி அம்பிகை மாலை'. இந்நூல் கட்டளைக் கலித்துறை யாப்பால் அமைந்த முப்பது பாடல்களைக் கொண்ட சிறு நூல். பாடல் ஒவ்வொன்றும் ''மதுராபுரி அம்பிகையே'' என முடிகின்றது. முப்பது பாடல்களும் பத்திச் சுவை நிறைந்த எளிய இனிய பாடல்கள்.

இந்நூல் குலசேகரன் என்பவரால் பாடப்பட்டது. இவர் 16ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டிய மன்னர் எனக் கருதப்படுகிறார். 18·ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அபிராமி பட்டரால் பாடப்பெற்ற அபிராமி அந்தாதிக்கு இந் நூல் மூல நூல் என்று சொல்லத்தக்க பெருமை வாய்ந்தது என அறிஞர்கள் கருதுகின்றனர். அபிராமி அந்தாதியின் நூல் அமைப்பும் சொற்றொடரும் கருத்தும் ''மதுராபுரி அம்பிகை மாலை'' யோடு ஒத்துக் காணப்படுகின்றன.

தமிழறிஞர் திரு. மு. அருணாசலம் பிள்ளை அவர்கள் அந்தாதியையும் மாலையையும் ஒப்பிட்டு ''அம்பிகை மாலை" என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை ஒன்றைச் சித்தாந்தம் என்ற திங்களிதழில் எழுதியுள்ளார்கள். (மலர் 39 இதழ் 10. பராபவ ஆண்டு ஐப்பசி அக்டோபர் 1966. பக்கம் 276-79).

''இணங்கேன் ஒருவரை நின்னிரு தாளன்றி யெப்பொழுதும்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன் வஞ்ச நெஞ்சருடன்
பிணங்கேன்

(என்பது அம்பிகை மாலை 11)

'வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன் நெஞ்சில்
வஞ்சகரோடு
இணங்கேன் எனதுன தென்றிருப் பார்சிலர் யாவருடன்
பிணங்கேன்'

(என்பது அந்தாதி 81.)

'கரும்பும் கணைஐந்தும் பாசாங் குசமும்கைக் கொண்டடியேன்
திரும்பும் திசைதோறும் தோற்றுகண்டாய்'

(என்பது மாலை 3.)

'பார்க்கும் திசைதோறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்புமென் அல்லலெல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள்'

(என்பது அந்தாதி 85)

'சடாடவியார் உண்ட காள விடத்தை அமுதாக்கும்
சிவானந்தமே மதுராபுரி அம்பிகையே'

(என்பது மாலை 26.)

'வார்சடையோன் அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை'

(என்பது அந்தாதி 5)

'முடிக்கொண்ட சொக்கர் அழியாவிரதம் முடிக்களன்றே
அடிக்கொண்ட பூண்முலையாய்'

(என்பது மாலை 13.)

'மதனை அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை
யண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகங் கொண்டாளும் பராபரையே'

(என்பது அந்தாதி 87.)

'வலியவந்தென் தலைக்கேய் பதம்வைத்த
தண்ணளியாய்'—மாலை 12,

'நின்பாதம் என்னும் வாசக்கமலம் தலைமேல் வலிய
வைத்து ஆண்டு'—அந்தாதி 32.

இவ்வாறு பலப்பல ஒப்புமைகள் மாலைக்கும் அந்தாதிக்கும் உள்ளன என்று அபிராமி அந்தாதி விளக்கவுரையில் பேராசிரியர் திரு. ந. இராமநாதனார் எடுத்துக்காட்டி யுள்ளார்கள்.

மாலையின் ஆசிரியர் மீனாட்சியம்மையின் அருள் பெற்றவர் எனத் தெளிவாகத் தெரிகிறது. 'விளையும் கருக்குழி வீழாமல் என்றன் வினைப்பிறவி, களையும் படிக்கும் கருதுகண்டாய்' (14) எனப் பிறவி வாராமலிருக்க வேண்டுவதும், 'எங்கே இருக்கினும் நாயடி யேனுக் கிடர் வரும் போது அங்கே வெளிப்படுவாய்' (18) என்று வேண்டுவதும் உருக்கமாக உள்ளன.

நூலுள் மீனாட்சியம்மை திருமணக் குறிப்பும் பிட்டுக்கு மண் சுமந்த குறிப்பும் கற்பனை நயத்தோடு பேசப்பட்டு உள்ளன. 'மணப் பந்தலிலே திருந்தும் கரம் பற்றி நிற்பார் திருமுகச் செல்வி எல்லாம் அருந்தும் கயல் விழியாய்' (20) என மீனாட்சி திருமணம் பேசப்படுகிறது.

'பொடிபட்ட பிட்டுக்குத் தோள்கொண்டு கூடைமண்
போட் டுப்பொங்கு
வெடிபட்ட வையை அடைத்த அந்நாட்சொக்கர்
மேனிசுற்றும்
கொடிபட்ட போது முழுநீலக் கோமள மேனியிலும்
அடிபட்டதோ (28)

என இரங்குவது கற்பனை நயமுடையதாக உள்ளது.

சிவபெருமான் பிறை சூடியிருப்பதாகப் பாடுவது மரபு. ஆனால் அவன் முழுப் பிறையையும் சூடவில்லையாம். ஏனெனில் அம்பிகை இடப்பாகத்துள்ளதால் சூடிய பிறையில் ஒரு பாதி இறைவனுக்கும் மறு பாதி தேவிக்கும் அமைவது இயல்பு ஆயிற்று, எனவே 'செம்பாதி பிறை முடித்த அணங்கே' (11) என விளிப்பது நுட்பமாகப் போற்றியின்புறத் தக்கது.

நூலில் சிற்சில இடங்களில் மதுரையைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அறுபத்துநான்கு திருவிளையாடல்களும் நடக்கும் மதுரை எனக் காப்புப்பாடல் புகழ்கிறது. 'கடம்பாடவி' (21) என்பது மதுரையின் பெயராகக் காணப்படுகிறது.

'........................கழிச்சேல் வெகுண்டு

வலைகுதிக் கும் செங் கழுநீர் உடைந்து வழிந்த

செந்தேன்


அலைகுதிக் கும்தடம் சூழ்மது ராபுரி (27)

என மதுரையின் இயற்கை வளம் சுட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு மதுரம் பெருகுறும் தமிழ்ச் சுவை செறிந்த 'மதுராபுரி அம்பிகை மாலை' தனித்த சத்தி வழிபாட்டிற் கோர் தோத்திர நூல். இந் நூலை ஓதியுணர்ந்து அம்பிகையின் அருளுக்குப் பாத்திரமாவோமாக.

தீந்தமிழின் ஒழுகுநறுஞ் சுவையாக விளங்கும் மீனாட்சி யம்மை வீற்றிருந்தருளும் மதுரை நகரத்தில் நடைபெறும் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் வேளையில் மதுரைக்குத் தொடர்புடைய இந்நூலை வெளியிடுவது மிகமிகப் பொருத்தமு டையதாகும். மேலும் இந்நூலை வெளியிடும் காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரி நிறுவனர் திருமிகு. இராம. பெரி. பெரியகருப்பன் செட்டியார் அவர்கள் தம் தாயார் பெயரால் ஏற்படுத்தியுள்ள 'மீனாட்சி ஆச்சி நினைவுச் சொற் பொழிவின்' போது (29—12—1980) வெளியிடுவதும் சாலப் பொருத்தமுடையதாகும்.

நலம் பொலிக!



மதுராபுரி அம்பிகை மாலை

விநாயகர் காப்பு

நடக்கும் திருவிளை யாட்டோர்
அறுபத்துநா லும்சொக்கர்
அடக்கும்தென் கூடலில் அம்பிகை
மாலைக் கருவிமதத்
தடக்கும்ப கம்பச் சிறுகண்
புகர்முகத் தாலவட்ட
முடக்கும் தடக்கை ஒருகோட்டு
வாரணம் முன்னிற்கவே.

சொக்கநாதரின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களும் நடைபெற்ற தென்மதுரையில் வீற்றிருக்கும் அம்பிகையின் மீது ''மதுராபுரி அம்பிகை மாலை'' எனும் இந்த நூலைப் பாடுவதற்கு நிறைந்த மதத்தையும் பெரிய மத்தகத்தையும் கட்டுத்தறியையும் சிறிய கண்ணையும் புள்ளிகளையுடைய முகத்தையும் ஆலவட்டம் போல் முடக்கிக் கொள்ளும் துதிக்கையையும் ஒற்றைக் கொம்பையும் உடைய யானை முகனாம் விநாயகப் பெருமானின் திருவருள் முன்னிற்பதாகுக!

கருவிமதம் — மிகுதியான மதநீர். தடக்கும்பம் — பெரிய மத்தகம். கம்பம் — யானை கட்டும் தறி. புகர் — புள்ளி. வாரணம் — யானை.

நூல்

1. திருவே! விளைந்தசெந் தேனே!
வடியிட்ட தெள்ளமுதின்
உருவே! மடப்பிள்ளை ஓதிம
மே!ஒற்றை ஆடகப்பூந்
தருவே! நின் தாமரைத்தா ளேசர
ணஞ்சர ணங்கண்டாய்
அருவே! அணங்கரசே! மது
ராபுரி அம்பிகையே!

மதுராபுரி அம்பிகையே! செல்வத் திருமகளே! இனிமை விளைந்த தேனே! தூய அமுத வடிவே! இளம் அன்னமே! ஒப்பற்ற பொன்னுலகக் கற்பகத் தருவே! உருவமில்லா அருவமே! பெண்டிர்க்கரசியே! நின் தாமரை போன்ற திருவடிகளே எனக்கு அடைக்கலம்.

ஓதிமம் — அன்னம். ஆடகம் — பொன்.

2. நாட்கொண்ட கொங்கைத் துணையும்பொன்
மேனியும் நஞ்சளித்த
வாட்கொண்ட நாட்டமும் தொண்டைச்செவ்
வாயும் மருங்குடுத்துத்
தோட்கொண்ட செம்பட்டும் முத்தார
மும்கொண்டு தோன்றிஎனை
ஆட்கொண்ட நாயகியே! மது
ராபுரி அம்பிகையே!

உயிர்கள் உய்தி பெறும் பொருட்டு நாளும் திருவருட்பால் சுரப்பதால் ஒளிகொண்ட மார்புகளும் பொன் போன்ற மேனியும் வாள்போன்ற ஒளி பொருந்திய கண்களும் கொவ்வைப் பழச் செவ்வாயும் இடுப்பில் செந்நிறப் பட்டும் தோள்மீது முத்துமாலையும் கொண்டு எனக்கு முன்னே தோன்றி என்னை ஆட்கொண்ட நாயகியே! சரணம்.

நாட்கொண்ட — ஒளி பொருந்திய. தொண்டை — கொவ்வைப் பழம்.

3. கரும்பும் கணைஐந்தும் பாசாங்
குசமும்கைக் கொண்டடியேன்
திரும்பும் திசைதோறும் தோற்றுகண்
டாய்இசை தேக்குமணிச்
சுரும்புண்ட காவியும் சோதிநிலா
வும்துளி ரும்சற்றே
அரும்பும் கனங்குழ லாய்! மது
ராபுரி அம்பிகையே!

இசை நிறைந்த அழகிய வண்டு உண்ட காவி மலரையும் ஒளிவீசும் மெல்லிய தளிரையும் சிறிது அரும்பையும் கொண்ட பெருமைமிகு கூந்தலை உடையவளே! கரும்பு வில்லுடன் தாமரை, முல்லை, அசோகு, நீலம், மா போன்ற ஐந்து மலரம்புகளையும் கொண்டு உயிர்கட்கு வரும் எம பயத்தை நீக்கும் பொருட்டுப் பாசக் கயிற்றையும், அங்குசத்தையும் கைப்பிடித்த வண்ணம் அடியேன் செல்லும் திசை தோறும் என்முன் தோற்றமளிப்பாயாக.

கணை ஐந்து — தாமரை, முல்லை, அசோகு, நீலம், மா. காவி — நீலமலர். பாசாங்குசம் — பாசம் + அங்குசம் = பாசக்கயிறும், தோட்டியும்.

4. குன்றே எனுமுலை யார்தரும்
காதற் கொடுமைஎல்லாம்
வென்றேன் மறலியை விட்டுவிட்
டேன்விரைத் தாமரைத்தாள்
என்றேஎன் சென்னிவைத் தாய்பின்னை
யான்செய்யும் ஏவலெல்லாம்
அன்றேஉன் ஏவல்கண் டாய்மது
ராபுரி அம்பிகையே

மதுராபுரி அம்பிகையே! மணம் மிக்க தாமரை மலர் போன்ற திருவடிகளை என் தலை மீது வைத்தாய். யான் செய்யும் செயலெல்லாம் நின் திருவருட் செயலாலேதான் என உணரக் காட்டினாய். இதனால் பெண்டிர் தரும் இன்ப மாம் துன்பத்தை வென்றேன். எம பயத்தை விட்டொழித்தேன்.

மறலி — எமன். விரை — மணம்

5. வடிவைத்த வேல்விழி யார்அநு
ராகமயக் கிற்சென்று
குடிவைத்த நெஞ்சென்று மீளுங்கொ
லோஅன்பு கொண்டதொண்டர்
முடிவைத்த வாறென் புலைத்தலைமேல்
வைத்தமுத் தின்தண்டை
அடிவைத்த பேரின்ப மே! மது
ராபுரி அம்பிகையே!

நின்பால் அன்புள்ளங் கொண்ட தொண்டர் முடி மீது வைத்தருளியது போல அன்பிலா என் புலைத்தலை மீதும் முத்துத் தண்டை அணிந்த நின் திருவடியை வைத்தருளிய பேரின்பமே! கூரிய வேல் போன்ற விழிகளையுடைய மகளிரின் காம மயக்கில் சென்றுழலும் என் நெஞ்சம் அக்காம உணர் வினின்றும் என்று மீளுமோ?

அநுராக மயக்கம் — காம மயக்கம்.

6. வடக்குன்ற மேருவும் முதண்ட
மெட்டி வளைந்துபுறம்
கிடக்கும் கடலும் புவனங்கள்
ஏழும் கிளர்மருப்புத்
தடக்குஞ் சரமெட்டும் எல்லாம்
திருஉந்தித் தாமரையில்
அடக்கும் பராசத்தி யே! மது
ராபுரி அம்பிகையே!

வடக்கில் உள்ள மலையாகிய மேருவையும் அண்டங் களையெல்லாம் வளைத்துச் சுற்றிய கடல்களையும் ஏழ் உலகங்களையும் விளங்கும் கொம்புகளையுடைய பெரிய திசை யானைகள் எட்டையும் தன்னுள் அடக்கும் பராசத்தியே! சரணம்.

முதண்டம் — பழைய உலகம். கிளர் மருப்பு — விளங்கும் கொம்பு. தடக்குஞ்சரம் — பெரிய யானை.

7. ஒளிகொண்ட வெண்பிறைத் தோடும்பொன்
ஓலையும் ஊறியதேன்
துளிகொண்ட செங்கனி வாயுமுத்
தாரமும் தோளுமென்றன்
களிகொண்ட நெஞ்சம் குடிகொண்ட
வாவிசைக் கக்குமணி
அளிகொண்ட பூங்குழ லாய்! மது
ராபுரி அம்பிகையே!

இசைபாடும் அழகிய வண்டுகள் சூழ்ந்த பூங்குழலுடையவளே! ஒளி பொருந்திய வெண்பிறை போன்ற தோடும் பொன்னாலான காதோலையும் தேன் சிந்தும் செங்கனி வாயும் முத்து மாலையும் தோளும் கொண்ட நின் வடிவோடு என்றன் களிகொண்ட நெஞ்சில் குடிபுகுந்தவளே! சரணம்.

அளி — வண்டு

8. மணியும் தரளமும் வெண்ணகை
யோவழி மூவர்செயத்
துணியும் தொழிலுமுன் செய்தொழி
லோபத்தித் துத்திமுடிப்
பணியும் சுடரும் கடல்ஏழும்
நின்கழல் பங்கயத்தில்
அணியும் திருஉருவே! மது
ராபுரி அம்பிகையே!

வரிசை பொருந்திய படத்தை உச்சியில்கொண்ட பாம்பையும் சூரிய சந்திர தாரகைகளாகிய சுடர்களையும் ஏழு கடல்களையும் நின் திருவடித் தாமரையில் அணிகலன் களாக அணிந்து கொள்ளும் அழகிய உருவமே! உலகில் காணப்படும் மணியும் முத்தும் நின் புன்முறுவலைக் காட்டு கின்றனவோ! முறையாக அயன், அரி, அரன் என்ற முத்தேவர்களாக இருந்து செய்யும் ஆக்கல், காத்தல், அழித்தலாகிய முத்தொழில்களும் நீ ஒருத்தியாக இருந்து செய்யும் தொழில்கள்தாமோ?

தரளம் — முத்து. பத்தித்துத்தி — வரிசையான படம்

9. செழுந்துங்கக் கொங்கையும் முத்தார
மும்பொற் சிலம்புந்திங்கள்
கொழுந்தும் மகரக் குழையுமெல்
லாம்வண்டு கொண்டுசுற்றி
உழுந்தும்பை சூடுந் திருமே
னியுமுன் உடலுமொன்ருய்
அழுந்தும் பராசத்தி யே! மது
ராபுரி அம்பிகையே!

செழுமையான மலை போன்ற மார்பையும் முத்து மாலையையும் பொற் சிலம்பையும் பிறைச் சந்திரனையும் மகரமீன் வடிவக் குழையையும் வண்டுகள் சூழும் தும்பை மாலையணியும் வடிவையும் உடைய அழகிய திருமேனியோடு வந்து என் உள்ளத்தில் பொருந்தும் பராசத்தியே! சரணம்.

துங்கம் - மலை, பெருமை, திங்கள் கொழுந்து - பிறைச் சந்திரன்.

10. கணையும் குமிழும் இணைநெடுஞ்
சாபமும்கா ரும்வள்ளைத்
துணையும் பவளமும் சோதி
நிலாவும் துவண்டபச்சைப்
பணையும் பனித்தடம் காந்தளும்
பாந்தளும் பத்துமொன்றாய்
அணையும் திருஉருவே! மது
ராபுரி அம்பிகையே!

அம்பு போன்ற கண்களும் குமிழம்பூப் போன்ற மூக்கும் நீண்ட வில் போன்ற வளைந்த புருவங்களும் மேகம் போன்ற கரிய கூந்தலும் வள்ளைக்கொடி போன்ற காதுகளும் பவளம் போன்ற செவ்வாயும் ஒளி வீசும் நிலவு போன்ற முகமும் வளைந்த பசுமையான மூங்கில் போன்ற தோள்களும் குளிர்ந்த காந்தள் மலர் போன்ற கைகளும் பாம்பு போன்ற இடை உறுப்பும் ஆகிய பத்துப் பொருள்களும் ஒன்றாய்ப் பொருந்தி விளங்கும் திருவுருவானவளே! சரணம்.

வள்ளை - வள்ளைக்கொடி. பணை - மூங்கில்.
பாந்தள் - பாம்பு.

11. இணங்கேன் ஒருவரை நின்னிரு
தாளன்றி எப்பொழுதும்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகி
லேன்வஞ்ச நெஞ்சருடன்
பிணங்கேன் அமுதம் பெருகும்
செம்பாதிப் பிறைமுடித்த
அணங்கே! சரணங்கண் டாய்மது
ராபுரி அம்பிகையே!

அமுத கிரகணங்களை வீசும் பிறைச் சந்திரனைச் சூடிய மதுராபுரி அம்பிகையே! நின்னையன்றி வேறொரு தெய்வத்தையும் நாடேன். நின் திருவடிகளை யன்றிப் பிறர் திருவடிகளை வணங்கேன்; பிறர் எவரையும் வாழ்த்தேன்; வஞ்சனையாளருடன் சேரேன். நின் திருவடிகளே சரணம்.

பிணங்கேன் - நெருங்கேன். செம்பாதி - சரிபாதி.

12. மூலைக்கே அவசத் துயர்விளைப்
பார்இன்ப மோகமென்னும்
வலைக்கே அகப்பட் டழுந்தி
விடாமல் வலியவந்தேன்
தலைக்கேய் பதம்வைத்த தண்ணளி
யாய்! முத்தம் தத்துதிரை
அலைக்கே வழிதுயில் வாய்மது
ராபுரி அம்பிகையே!

முத்துக்கள் எடுத்தெறியும் கடலிலே துயில் கொள்ளும் மதுராபுரி அம்பிகையே! என் தலை மீது நின் பாதங்களை வைத்து அருள் செய்தவளே! மார்புகளாலே மிக்க துன்பம் செய்யும் பெண்ணின் இன்ப மயக்கமாம் வலையில் அகப்படாமல் நீங்கி நின்னிடம் வந்தேன். காத்தருளுவாயாக

அவசம் - மயக்கம்-

13. கொடிக்கொண்ட சிற்றிடை யார்மணி
நூபுரம் கொஞ்சுமடிப்
பொடிக்கொண்ட சென்னியுன் கால்வைக்கு
மோபுற் றரவெடுத்து
முடிக்கொண்ட சொக்கர் அழியா
விரதம் முடிக்கஎன்றே
அடிக்கொண்ட பூண்முலை யாய்! மது
ராபுரி அம்பிகையே!

புற்றிலுள்ள பாம்பை முடிமீது கொண்ட சொக்க நாதரின் மாறாத யோகமாகிய விரதம் அழிய வேண்டிப் பாந்த மார்புகளைக் கொண்ட மதுராபுரி அம்பிகையே! கொடி போன்ற இடையினையுடைய மகளிரின் சிலம்பணிந்த கால்களை ஊடற் பொருட்டு வணங்குதலால் அக்கால்களின் தூசுகளைக் கொண்ட என் தலை மீது நின் திருவடிகள் வந்து தங்குமோ?

நூபுரம் - சிலம்பு. அழியா விரதம்-மாறாத யோகம்.

14. **வி**ளையும் கருக்குழி வீழாமல்
 என்றன் வினைப்பிறவி
 களையும் படிக்கும் கருதுகண்
 டாய்கழு நீரைவென்று.
 வளையும் தாள மணித்தோ
 டழுந்திய வள்ளையைச்சென் (று)
 அளையும் கயல்விழி யாய்! மது
 ராபுரி அம்பிகையே!

செங்கழுநீர்ப் பூவை வென்றதும் முத்தும் மணியும் அழுத்திச் செய்த தோடணிந்த வள்ளைப்பூப் போன்ற காதுகள் வரை சென்று சேர்வதும் ஆகிய கயல் போன்ற விழிகளையுடைய மதுராபுரி அம்பிகையே! யான் மீண்டும் மீண்டும் பிறப்பு எடுக்காமல், என் பிறவிப் பிணி நீங்கும்படி அருள்வாயாக.

அளையும் - கலக்கும், சேரும்.

15. **ஊட**ும் பொழுதுன் கருணை
 விடாமல் உவப்பதற்குக்
 கூடும் தொழிலை மறப்பதுண்
 டோநறைக் கொன்றையந்தார்
 சூடும் தலைவர் திருமார்பில்
 வாரி சொரிதரளம்
 ஆடும் துணைமுலை யாய்! மது
 ராபுரி அம்பிகையே!

முத்து மாலைகள் புரளும் மார்புகளையுடைய மதுராபுரி அம்பிகையே! தேன் மிக்க கொன்றை மாலை சூடும் நின் தலைவராம் சிவபெருமான் நின்னோடு ஊடுங் காலத்து அவர் நின் கருணை முழுவதையும் விடாமல் பெற்று மகிழ விரும்பும்போது அவரது திருமார்பில் சேர்ந்து இன்புறுத்தும் தொழிலை நீ மறப்பதுண்டோ? இல்லையே! அது போல எனக்கு எல்லாக் காலத்தும் அருள் செய்ய மறக்கவேண்டாம்.

நறை - தேன். வாரி - கடல்.

16. மழைக்கொந் தளக மடவர்தம்
காதல் வலைத்தலைப்பட்(டு)
உழைக்கும் துயரம் ஒழிப்பதென்
றோ?விரண் டுசெல்மணிக்
குழைக்கும் கலந்த பசுமைஎ
லாம்குழை யூடுநடந்(து)
அழைக்கும் கயல்விழி யாய்! மது
ராபுரி அம்பிகையே!

ஊசல் போல் அசையும் அழகிய குழை வரை நீண்டு அருளும் பசுமையான கயல் போன்ற விழிகளையுடைய மதுராபுரி அம்பிகையே! மேகம் போன்ற கரிய கூந்தலையுடைய பெண்டிர்தம் காதல் வலையில் பட்டு வருந்தும் என் துன்பத்தை ஒழிப்பது எந்நாளோ?

மழைக்கொந்தளக மடவார் - மேகம் போன்ற கூந்தலையுடைய மகளிர்.

17. இணைக்கும்ப மென்முலை யார்விழி
வேலுக்கும் எய்யுமதன்
கணைக்கும் தனிஇலக் காவிட
வோமணிக் கச்சகலாத்
துணைக்கும்ப மென்முலை யாய்!சொக்கர்
மேனிதுவ ளக்கட்டி
அணைக்கும் கமலமுள் ளாய்! மது
ராபுரி அம்பிகையே!

சொக்கநாதரின் மேனி துவளும்படி அவரைக் கட்டி அணைக்கும் கச்சகலாத மார்பை யுடையவளே! தாமரையில் தங்கியுள்ளவளே! பெரிய மார்பை உடைய பெண்டிரின் விழியாகிய வேலுக்கும் வீசுகின்ற மன்மதனின் மலர் அம்பு களுக்கும் நான் இலக்காக வேண்டுமோ? இலங்காகாமல் காப்பாய்.

18. ஞாம்கேள்வர் பாகத்தும் அந்நான்
மறையெனும் நூலிடத்தும்
கொங்கேய் பொகுட்டுக் கமலா
லயத்தும் குடிகொண்டநீ
எங்கே இருக்கினும் நாயடி
யேனுக் கிடர்வரும்போ(து)
அங்கே வெளிப்படு வாய்மது
ராபுரி அம்பிகையே!

மதுராபுரி அம்பிகையே! நின் கணவரின் இடப் பாகத்தும் நான்கு வேதங்களிடத்தும் தேன் பொருந்திய தாமரையிலும் குடி கொண்ட நீ எங்கிருப்பினும் நாயேனுக்கு இடர் வரும்போது அவ்விடரைக் களையத் தோன்றியருள் வாயாக.

கொங்கு - தேன்.

19. பொன்னே! நவமணி யே! அமு
தே! புவி பூத்தடங்கா
மின்னே! ஒளியுற்ற மெய்ப்பொரு
ளே! கரு மேதியின்மேல்
எந்நேரம் காலன்வந்தாவிவிட்
டாலுமெனக் கஞ்சேலென்(று)
அந்நேரம் வந்தருள் வாய்! மது
ராபுரி அம்பிகையே!

பொன்னே! நவமணியே! அமுதமே! மதுராபுரி அம்பிகையே! பூமியைத் தோற்றுவித்து அதனுள் அடங்கும் மின்னே! ஒளிமயமான மெய்ப்பொருளே! எந்நேரம் என் முன்னே கரிய எருமையின் மீது எமன் வந்தாலும் அப்போது என் ஆவி பிரியும். அந்த நேரத்தில் அம்பிகையே! எனக்கு அஞ்சேல் என்று அருள் செய்வாயே!

மேதி - எருமை.

20. விருந்துண்டு போகைக்கு நாயேன்
சடலத்தை வெங்கழுகும்
பருந்தும் சுழலுமுன் னேவரு
வாய்மணப் பந்தலிலே
திருந்தும் கரம்பற்றி நிற்பார்
திருமுகச் செவ்விஎல்லாம்
அருந்தும் கயல்விழி யாய்மது
ராபுரி அம்பிகையே!

திருமணப் பந்தலில் நின் திருக்கரம் பற்றி நிற்பா ராகிய சிவபெருமானின் திருமுகக் குறிப்பை யெல்லாம் நோக்கியருளும் கயல் போன்ற விழிகளையுடையவளே! சுற்றித் திரியும் கழுகும் பருந்தும் நாயேன் சடலத்தை விருந் தாக உண்பதற்கு முன்னே வந்தருள்வாயாக!

21. நாரணன் கொஞ்சும் புகழ்நான்
முகற்கும்பொன் நாட்டவர்க்கும்
காரணம் கொஞ்சுநின் சிற்றடிக்
கேதிசை கட்டுமெட்டு
வாரணம் கொஞ்சும் கடம்பா
டவியின் மகிழ்நருடன்
ஆரணம் கொஞ்சுமம் மே! மது
ராபுரி அம்பிகையே!

எட்டுத் திசைக்கும் உரிய எட்டு யானைகள் வாழும் கடப்பமரக் காடாகிய மதுரையில் சொக்கருடன் வேதங்களை எடுத்து மொழிந்து கொஞ்சும் தாயே! நாராயணன் கொஞ்சுகின்ற புகழையுடைய பிரமனுக்கும் பொன்னாட்டுத் தேவர்களுக்கும் காரணமாக உள்ள நின் திருவடிகளே சரணம்

கடம்பாடவி — மதுரை.

22. நெருளிக்கும் புழுவுக் கிடமாம்
குரம்பையின் நின்றுமுயிர்
ஒளிக்கும் பொழுது வெளிப்படு
வாய்! ஒழி யாப்பிறவிச்
சுளிக்கும் கடலில் சுழலாமல்
வாழ்வைத் துறந்துபடைத்(து)
அளிக்கும் பராசக்தி யே!மது
ராபுரி அம்பிகையே!

மாறி வரும் பிறவிக் கடலில் அகப்பட்டு உழலாமல் இவ்வுலக வாழ்வை நீக்கி வீட்டின்ப வாழ்வைப் படைத்தளிக்கும் பராசத்தியே! நெளிந்து செல்லும் புழு வாழ்தற்கு இடமான புல்லிய என் உடம்பினின்றும் உயிர் போகும் போது என் பிறவி ஒழியும் பொருட்டு வெளிப்பட்டுத் தோன்றுவாயாக.

குரம்பை - உடம்பு.

23. ஒழியாப் பனித்தடங் கண்ணீர்
சொரியவந் துன்னடிக்கே
பொழியாப் புதுமலர் இட்டுநிற்
பார்க்குன் பொழிகருணை
விழியால் சுரப்ப அலர்ந்தசெந்
தாமரை வீடொன்றவே
அழியாப் பதந்தரு வாய்! மது
ராபுரி அம்பிகையே!

மதுராபுரி அம்பிகையே! எப்பொழுதும் கண்ணீர் சொரிந்து நின் திருவடிக்கு அன்றலர்ந்த மலரிட்டு வழிபாடு செய்பவருக்குக் கருணை பொழிகின்ற செந்தாமரை விழியால் அருள் சுரந்து வீட்டின்பப் பதத்தை நல்குவாய்.

24. ஏல மடக்கும் குழலார்குற்
றேவலில் எய்த்தடியேன்
கால மடங்குமுன் னேவரு
வாய்விண் கடந்துநின்ற
கோல மடங்கும் அறியாத
பச்சைக் குழவியைப்போல்
ஆல மடங்குமம் மே!மது
ராபுரி அம்பிகையே!

விண்ணுலகைக் கடந்து நின்ற அழகையெல்லாம் கொண்ட இளம் குழந்தையைப் போல் அறியாமல் விடத்தை உண்டு அடக்கிய தாயே! ஏலம் மணக்கும் கூந்தலையுடைய பெண்டிரின் குற்றேவலில் அகப்பட்டுத் தளர்ந்து அடியேனது வாழ்வு அடங்கு முன்னே வருவாயாக.

எய்த்து — இளைத்து.

25, போர்க்கும் கலாமதியும் கொன்றை
மாலையும் பொன்முடிமேல்
சேர்க்கும் தலைவர்முன் செல்லுமப்
போது திரண்டமுத்தின்
வார்க்குங் குமக்கொங்கை யானைக்
குமுன்னம் மணிமுரசம்
ஆர்க்கும் பராசக்தி யே!மது
ராபுரி அம்பிகையே!

பதினாறு கலைகளையுடைய சந்திரனையும் கொன்றை மாலையினையும் அழகிய முடிமேல் வைத்துள்ள சிவபெருமான் முன் போர்க் கோலமிட்டுத் தான் செல்வதற்கு திரண்ட முத்து மாலையுடன் குங்குமம் அணியப்பட்ட மார் பாகிய யானையையுடைய போர் முரசு கொட்டி ஆர்க்கின்ற பராசத்தியே! சரணம்.

26. நோக்கும் கருணை விழியால்
பொதுவற நோக்கிஎன்னைக்
காக்கும் படிக்கும் கருதுகண்
டாய்ஒளி கக்குநிலா
வீக்கும் சடாடவி யாருண்ட
காள விடத்தையமு(து)
ஆக்கும் சிவானந்தமே! மது
ராபுரி அம்பிகையே!

ஒளி வீசும் நிலாவைச் சூடிய சடைக் காட்டை யுடைய சிவபெருமான் உண்ட ஆலகால விடத்தை அமுதமாக மாற்றிய சிவானந்தமே! நின் கருணை விழியால் எல்லோ-ரையும் பொதுவாக நோக்குவதைப் போலல்லாமல் என்னைத் தனியே நோக்கிக் காக்கும்படிக் கருதுவாயாக.

வீக்கும் - சூடும். சடாடவி - சடைக்காடு (சடை + அடவி)
காளவிடம் - ஆலகால விடம்.

27. உலைகுதிக் கும்தழல் ஊறிய
கானலைஉன் னிச்சென்று
கலைகுதிக் கும்படி போல்இழைத்
தேன்கழிச் சேல்வெகுண்டு
வலைகுதிக் கும்செங் கழுநீர்
உடைந்து வழிந்தசெந்தேன்
அலைகுதிக் கும்தடம் சூழ்மது
ராபுரி அம்பிகையே!

உப்பங்கழிகளில் உள்ள சேல் மீன்கள் பாய்ந்து குதிக்கவும் செங்கழுநீர்ப்பூ மலர்ந்ததால் வழிந்த செந்தேன் அலைகள் வீசுவதுமான தடாகங்கள் சூழ்ந்த மதுராபுரிக்குத் தலைவியே! உலைக்களத்தில் கொதிக்கும் நெருப்பைப்போன்ற வெப்பமுடைய காட்டை வாழ்தற்குரிய நிலமாக நினைந்து சென்று மான் குதித்துத்துன்பம் அடைவதுபோலக்கொடியவை களையே இன்பமெனக் கருதி மயங்கித் துன்பம் அடைந்தேன் காப்பாயாக!

28. பொடிபட்ட பிட்டுக்குத் தோள்கொண்டு
கூடைமண்போட் டுப்பொங்கு
வெடிபட்ட வையை அடைத்தஅந்
நாட்சொக்கர் மேனிசுற்று
கொடிபட்ட போது முழுநீலக்
கோமள மேனியிலும்
அடிபட்ட தோஅணங் கே! மது
ராபுரி அம்பிகையே!

மதுராபுரி அம்பிகையே! வந்தி மூதாட்டி தரும் உதிர்ந்த பிட்டுக்காகத் தோளில் கூடை கொண்டு மண் சுமந்து பொங்கி வந்த வையை நதியை அடைத்த அந்நாளில் பாண்டியன் சொக்கநாதர் மீது பிரம்பால் அடித்த போது முழு நீல வண்ணமான நின் இளமை வாய்ந்த மேனியிலும் அடி பட்டதோ?

கோமளம் — இளமை.

29. பூண்டகை வாரிப் புதுமலர்
தூவிநின் பொன்னடிக்கே
கூண்டகை சென்னி குவிக்கப்பெற்
றேன்பிறைக் கோடணிந்த
நீண்டகை வேழப் பிடர்ஏறி
வட்ட நிலம்புரக்கும்
ஆண்டகை யே! அணங் கே! மது
ராபுரி அம்பிகையே!

பிறை போன்ற வளைந்த மருப்பும் நீண்ட கையும் உடைய யானையின் மீதிருந்து உலகம் முழுவதையும் காக்கும் ஆண்டகை யானவளே! பெண்ணணங்கே! ஆபரணம் பூண்ட கைகளால் அன்றலர்ந்த புதிய மலர்களை வாரித் தூவி, என் தலைமீது கை குவித்து நின் திருவடிகளை வணங்கினேன்.

கூண்டகை — வளர்ந்த தன்மை (கூண் + தகை).

30. கொஞ்சும் குதலைமின் னார்க்கன்பு
பூண்டு குலையுமென் றன்
நெஞ்சுன்பொற் பாதம் நினைப்பதுண்
டோவெண் ணிலாமதிக்கூன்
பிஞ்சும் கணைவில்லும் அங்குச
பாசமு ம்பிஞ்சுமலர்
அஞ்சும் தரித்தவ ளே! மது
ராபுரி அம்பிகையே!

வெண்ணிலவின் கொழுந்தும் கணை வில்லும் அங்குசபாசமும் ஐந்து மலர்களும் கொண்ட மதுராபுரி அம்பிகையே! கொஞ்சும் மழலை பேசும் மின்னல் போன்ற பெண்டிர்க்கு அன்பு பூண்டு அழியும் எனது நெஞ்சம் நின் பொற்பாதத்தை நினைக்குமோ? நினையாதாகையால் எனக்கு நின் திருவருள் தந்து நினைக்கச் செய்வாயாக!

குதலை — மழலை.

நூற் பயன்


பிடித்தாரைக் கட்டி அணைத்தமு
    தூட்டிய பேயின்முலை
குடித்தாடு மாயன் குலசே
    கரன்வடகுன் றைச்செண்டால்
அடித்தான் வடித்தசொல் அம்பிகை
    மாலைஐ ஆறுகவி
படித்தார்கள் கற்பகக் காவும்பொன்
    னுடும் படைப்பவரே.

தன்னை வந்தடைந்தாரைக் கட்டி அணைத்துப் பாலமுதம் ஊட்டாது நஞ்சூட்டும் பூதகி என்னும் பேயின் மார்பைக் குடித்து அம்மாயப் பேயை அழித்த திருமாலின் அவதாரமான மேருமலையைச் செண்டால் அடித்த மன்னனாம் குலசேகரன் பாடிய இம் ''மதுராபுரி மாலை'' முப்பதையும் படித்தவர்கள் கற்பகத் தருவையும் பொன்னுலகையும் பெறுவர் என்பதாம்.

செண்டு — தலைப்பகுதி இரண்டாகப் பிளந்து
வளைந்துள்ள ஆயுதம்.



பாடல் முதற்குறிப்பு



எமது வெளியீடுகள் :

•••○O○•••

மறைமலையடிகள் பிள்ளைத்தமிழ் ரூ 6/-
கவிஞர் சி. அன்பானந்தம்

அபிராமி அந்தாதி
பேராசிரியர் ந. இராமனாதன், எம்.ஏ.பி.ஓ.எல்.
விளக்கவுரையுடன் ரூ 6/-



மெய்யம்மை பதிப்பகம்